**செய்தி வெளியீடு எண்: 648** **நாள்:27.09.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 26.9.2019 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட ‘‘சாரல்’’ என்ற பெயரில் தலைமுடி நீர்மம் (Shampoo), ‘‘எழில்’’ என்ற பெயரில் குளியல் நீர்மம் (Body Wash) மற்றும் ‘‘வைகை’’ என்ற பெயரில் கை கழுவும் நீர்மம் (Liquid Handwash) ஆகிய மூன்று புதிய வகை தயாரிப்புகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தினார்கள்.

சிவகங்கை மாவட்டம், கண்டனூரில் அமைந்துள்ள தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சொந்தமான வளாகத்தில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திரவ சோப்பு மற்றும் ஷாம்பூ தயாரிக்கும் அலகு நிறுவப்பட்டுள்ளது. இப்புதிய அலகில், **‘‘சாரல்’’** என்ற பெயருடன் கற்றாழை, நெல்லிக்காய், தாவர எண்ணெய், தேயிலை மர எண்ணெய், ஜோஜோபா எண்ணெய், மஞ்சள், மென்தால் மற்றும் இதர தரமான மூலப்பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்ட 100 மில்லி லிட்டர் மற்றும் 200 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட **தலைமுடி நீர்மம்** (Shampoo), **‘‘எழில்’’** எனும் பெயருடன் கற்றாழை, நெல்லிக்காய், கிளிசரின் ஆகிய இயற்கை மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்ட 200 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட **குளியல் நீர்மம்** (Body Wash), **‘‘வைகை’’** எனும் பெயருடன் கற்றாழை, மஞ்சள், கிளிசரின் ஆகிய மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 250 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட **கை கழுவும் நீர்மம்** (Hand Wash) ஆகிய மூன்று புதிய வகை பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய புதிய தயாரிப்புகளுக்கான ‘‘சாரல்’’ என்ற தலைமுடி நீர்மம் (Shampoo), ‘‘எழில்’’ என்ற குளியல் நீர்மம் (Body Wash) மற்றும் ‘‘வைகை’’ என்ற கைகழுவும் நீர்மம் (Liquid Handwash) ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தினார்கள். இப்புதிய தயாரிப்புகள் கதர் அங்காடிகள்,

நியாய விலைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள் ஆகியவற்றின் மூலம் விற்பனை செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் திரு. க. பாஸ்கரன், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு. சி. நடராசன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**